DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 74/2019
Prosecution witness – P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.கல்யாணக்குமார்** | Caste: | |
| Father's Name | :நாராயணன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

13.08.2025 –12.25 PM

Accused present. Defense counsel present.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கரூர் மாவட்டம் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2012 ம் ஆண்டு அபிராமம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அது சமயம் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக திரு.இராமமூர்த்தி என்பவர் பணிபுரிந்து வந்தார். அவர் தற்போது இறந்துவிட்டபடியால் அவர் சார்பாகவும் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி என்பவர் கடந்த 01.07.2012 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.96/2012 இ.த.ச பிரிவுகள் 371, 374 மற்றும் பிரிவு 16, 17, 18 of Bonded Labour (Abolition) Act– 1976 வழக்கு பதிவு செய்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றே புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு சமர்ப்பித்தார்.

3. நான் அன்றே இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்று 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அச்சங்குளம் கிராம நிர்வாக அலுவலர் திரு.போஸ் மற்றும் கிராம உதவியாளர் திரு.சண்முகநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்று் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5**

ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான காளிஸ்வரன், சுரேஷ், கண்ணதாசன், போஸ், சண்முகநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 02.07.2012 ம் தேதியன்று சாலை மறைக்குளம் சென்று இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களான நடராஜன், செல்வம், நேசம்மாள், ராஜா, கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.07.2012 ம் தேதி பாதிக்கப்பட்ட நபர்களான இராஜேந்திரன், ரவி, கார்த்திக், சேகர், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 04.07.2012 ம் தேதி பாதிக்கப்பட்ட நபர்களான மாரிமுத்து, கருப்பன், கோட்டைப்பாண்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடிவந்த நிலையில் எதிரியானவர் மாண்புமிகு இராமநாதபுரம், மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுவிட்டபடியால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 31.12.2013 ம் தேதி வழக்கில் புகார் பெற்று வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றே வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 371, 374 மற்றும் பிரிவு 16, 17, 18 of Bonded Labour (Abolition) Act– 1976 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு முறை பற்றி ஏதேனும் சிறப்பு பயிற்சி எடுத்துள்ளேனா என்றால் அவ்வாறு தனியாக சிறப்பு பயிற்சி மேற்கொள்ளவில்லை. ஆனால் சட்டப் புத்தகங்களை படித்து தெரிந்து கொண்டுள்ளேன். கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு முறை சட்டத்தில் உள்ள விளக்கமுறை வகையங்களில் உள்ள சட்ட வாக்கியங்கள் குறித்து தெரியுமா என்றால் புத்தகத்தை பார்த்தால் தெரிந்து கொள்வேன். அப்படி என்றால் புத்தகத்தை பார்த்து சட்டத்தை தெரிந்து கொள்ளாமல் தான் இவ்வழக்கினை

விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் அப்போது படித்துப் பார்த்துதான் விசாரணை செய்தேன்.

2. எதிரியானவர் கொத்தடிமை தொழிலாளர் வைத்து செயல்படுத்தியதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் எந்த அடிப்படையில் எவ்வாறு எந்த முறையில் கொத்தடிமைகளாக நபர்கள் நடத்தப்பட்டார்கள் என்பது குறித்து நான் இறுதி அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் நான் சாட்சிகளை விசாரித்ததில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டதை மட்டும் தான் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். எந்த விதத்தில் என்பதை குறிப்பிட்டு கூறவில்லை.

3. எந்த முறையில் குற்றச் செயல் நடைபெற்றது என்பதை இறுதி அறிக்கையில் விளக்க வேண்டியது புலன் விசாரணை அதிகாரியின் கடமை என்றால் சரிதான். இறுதி அறிக்கையிலோ அத்துடன் இணைந்த மற்ற ஆவணங்களிலோ சுகன்யா சேம்பர் என்ற இடமானது எங்கு அமைந்துள்ளது, அதன் பரப்பளவு எவ்வளவு, சர்வே எண் என்ன என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அச்சங்குளம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தலையாரி மூலம் சம்பவம் நடைபெற்ற இடமானது எதிரிக்கு சொந்தமானது என்பதை தெரிந்து கொண்டேன். அவ்வாறு தெரிந்து கொண்ட விபரத்தை அவர்களது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்களா என்றால் ஆமாம் கூறியுள்ளார்கள்.

4. நான் அச்சங்குளம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரியை விசாரித்தபோது சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடத்தின் விபரங்களை கூறியுள்ளார்களா என்றால் அது பற்றி கூறவில்லை. அந்த இடத்தின் சர்வே எண், பரப்பளவு, 10(1) நகல் குறித்து விசாரிக்காமல் இருந்ததற்கு காரணம் என்னவென்றால் நான் விசாரித்தேன். அவர்கள் கூறவில்லை. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி அவர்கள் மேற்படி இடத்தை குறித்து விபரங்களை கூறாமல் என்னால் எவ்வாறு சுகன்யா சேம்பர் எங்கு உள்ளது, எவ்வளவு பரப்பளவு கொண்டது என்பதை தெரிந்து கொள்ள இயலும் என்றால் சாட்சிகள் அடையாளம் காட்டிய இடம் தான் சுகன்யா சேம்பர் என்பதை தெரிந்து

கொண்டேன். ஆனால் சுகன்யா சேம்பருக்கு எவ்வித ஆவணங்களும் நான் கைப்பற்றவில்லை.

5. நான் சுகன்யா சேம்பரை பார்வையிட சென்றதாக சொல்லப்படுகிற நிலையில் அந்த சேம்பரில் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் எத்தனை இருந்தது என்றால் பார்வை மகஜரில் எத்தனை குடியிருப்புகள் என்று நான் குறிப்பிடவில்லை. ஆனால் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் இருந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். நான் சம்பவ இடம் சென்றதாக சொல்லப்படுகிற நிலையில் அலுவலகத்தில் இருந்த நபர்களையோ அல்லது குடியிருப்பில் இருந்த நபர்களையோ விசாரித்தேனா என்றால் இல்லை.

6. கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு சம்மந்தமாக யார் புகாரை கொடுக்க முடியும் என்பதை நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக சட்டப் புத்தகத்தை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் அவ்வாறு சட்டப்புத்தகத்தை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. எனக்கு தகவல் வந்ததால் புலன் விசாரணை மேற்கொண்டேன். தகவலானது பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து தாசில்தாருக்கு தகவல் கிடைக்கப்பெற்று எனக்கு வந்த புகாரை பெற்றேன். அந்த பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரை விசாரித்தேனா என்றால் இல்லை. எனக்கு வருவாய் கோட்டாட்சியரை விசாரிக்க வேண்டிய கடமை உள்ளது என்றால் சரிதான். பிறகு சாட்சி அவர் வழக்கிற்கு தேவையில்லை என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்று கூறினார்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆவணங்களை பரிசீலிக்க வேண்டி கால அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.